




# திராவிட மாடல் அரசு

## 92

**பன்னீர் பெருமாள்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

சர்வதேச அளவிலான தொழில்நுட்ப வளர்ச்சிகளை உள்வாங்கும் மாநிலமாக, இந்திய அளவில் தமிழ்நாடு எப்போதும் முன்னணியில் நிற்கும் மாநிலம். அவற்றைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வருவதிலும், ஆக்கப்பூர்வப் பணிகளுக்கு அவற்றை வளர்த்தெடுப்பதிலும், கழக அரசின் பங்களிப்பை, தமிழ்நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சியை வரலாறுகள் சொல்லும்.

கணினி அறிவியல் தொடங்கி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி வரை இந்தியாவுக்கே முன்னோடி மாநிலம், தமிழ்நாடுதான். முதலில் அறிமுகப்படுத்திய மாநிலமும் தமிழ்நாடுதான். அந்த வளர்ச்சியில் முனைப்புக் காட்டியவர், முத்தமிழறிஞர் கலைஞர். அவரது வழியிலான நமது திராவிட மாடல் அரசும், நவீனங்களைப் புகுத்துவதில், இந்தியாவிற்கு முன்னோடியாக இருக்கிறது. அதற்கான சான்றுதான், தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2024 மாநில விளையாட்டுப் போட்டி. இதில், இந்தியாவிலேயே முதன்முறையாக, ‘இ-ஸ்போர்ட்ஸ்’ என்கிற இணைய விளையாட்டுப் போட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

‘ஜாய் ஸ்டிக்’, ‘கைப்பேசி’, ‘கணினி’ மூலம் விளையாடப்படும் ஆன் லைன் விளையாட்டுக்கென நடத்தப்படும் போட்டிகள் ‘இ-ஸ்போர்ட்ஸ்’ என்று சொல்லப்படுகின்றன. ‘இ- ஸ்போர்ட்ஸ்’ போட்டிகளை வழக்கமான விளையாட்டுப் போட்டிகளைப் போல் சர்வதேச விளையாட்டு அமைப்புகள் அங்கீகரித்துள்ளன.

### சர்வதேச வாய்ப்புகள்

கடந்த சில மாதங்களுக்கு முன், சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இ-ஸ்போர்ட்ஸ் போட்டிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. அடுத்த ஆண்டு, துபாயில் ‘இ- ஸ்போர்ட்ஸ்’க்கென உலகக் கோப்பை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக, ஒலிம்பிக் போட்டிகளிலும் ‘இ-ஸ்போர்ட்ஸ் போட்டிகள்’ இணைக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியான பின்புலன்களுடன்தான் நம் திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டில் இ-ஸ்போர்ட்ஸ் துறையில் திறமை உள்ளவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கியது. சமீபத்தில், நடைபெற்ற முதலைமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில், இ-ஸ்போர்ட்ஸ் திறமையாளர்களுக்கான போட்டியையும் நடத்தி, சர்வதேச விளையாட்டுச் சமூகத்தினரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

### போட்டிகளின் விவரம்

தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட இ- ஸ்போர்ட்ஸ் போட்டியில், இ.ஏ.எஃப் சி-24 (E.A. F.C-24),என்.பி.கே-2K 25 (N.B.A.2K 250), ரியல் கிரிக்கெட் - 2024 (REAL CRICKET- 2024), பேட்டில்கிரவுண்ட்ஸ் மொபைல் இந்தியா (BATTLEGROUNDS MOBILE INDIA (B.G.M.I), இ-செஸ் (E-CHESS), எஃப்-1-2024 ( F-1-2024), ஸ்ட்ரீட் ஃபைட்டர்- 6 உள்ளிட்ட எட்டு பிரபலமான, பலமான விளையாட்டுகளில் தங்கள் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பை உருவாக்கியது. இதில், தமிழ்நாட்டில் ஆர்வமுடைய இளம் வீரர்கள் முதல் இந்த இ- ஸ்போர்ட்ஸில் அனுபவம் உள்ள வீரர்கள் வரை, கலந்து கொண்டனர்.






**நவீனத் தொழில்நுட்பம் உருவாக்கியிருக்கும் புதிய களத்தில் இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது, திராவிட மாடல் அரசு.**

பொக்மேன் யூ விளையாட்டில் 5 ஆயிரத்து 70 பதிவுகளில், 2 ஆயிரம் பங்கேற்பாளர்கள் தகுதிச் சுற்றுக்கும், 110 பேர் இறுதிப் போட்டியிலும் தேர்ச்சி பெற்றனர்.

விளையாட்டுப் போட்டிகள் மூன்று சுற்றுகளாக நடைபெற்றன. அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் முன், தகுதிப் போட்டிகள் ஆன்லைனில் நடந்தன, இதில் பங்கேற்பாளர்கள் தங்கள் வீடுகளில் இருந்து போட்டியிட்டனர். கடுமையான போட்டி நிறைந்த இரண்டாவது சுற்று, நுங்கம்பாக்கத்தில் உள்ள விளையாட்டு மையத்தில் நடத்தப்பட்டது. இறுதிப் போட்டிகள், ஜவஹர்லால் நேரு மைதானத்தின் உள்ளரங்கத்தில் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து ஸ்கை-ஸ்போர்ட்ஸ், தமிழ்நாடு இ-ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன் மற்றும் தமிழ் இ -ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன் ஆகியவையும் இதில் பங்காற்றினர்.

### பங்கேற்றவர்களின் கருத்துகள்

இ.ஏ.எஃப் சி-24 (E.A. F.C-24) போட்டியில் ஏற்கனவே தேசிய அளவில் புகழ் பெற்ற நவீன் வெற்றி பெற்றார். ஸ்ட்ரீட் ஃபைட்டர்- 6- இல், இறுதிப் போட்டியில் பாரத் மஹ்தானி, 3-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று முதலிடத்தைப் பிடித்தார். சரத், வி.ஏ (V.A), என்.பி.ஏ.- 2கே.25 (N.B.A.- 2K25) போட்டியில் வென்றார். எஃப்-1 -2024 (F1- 2024) போட்டியில் திலீப் வெற்றி பெற்றார். நிகில் மகிஷ்னன் மற்றும் ஜி பன்ஹி கிரண் ஆகியோர் முறையே போகிமான் யுனைட்,இ-செஸ் (E-CHESS) மற்றும் ரியல் கிரிக்கெட் -2024 (REAL CRICKET-2024) இல் முதலிடம் பிடித்தனர்.

இந்தப் போட்டியில் வீரர்களிடம் உரையாற்றிய பாரா வீரர் திருமுருகன் வேலு,




போட்டியின் முக்கியத்துவம் குறித்துப் பேசியவை, பங்கேற்பாளர்கள் தங்கள் திறமை மற்றும் கேமிங்கில் ஆர்வத்தை வெளிப்படுத்த ஊக்கம் அளித்ததாகக் போட்டியாளர்கள் கூறியிருந்தனர்.

இந்திய அளவில் இ-ஸ்போர்ட்ஸ் துறையில் பிரபலமாக விளங்கும் நவீன் இந்தப் போட்டி குறித்து பேசும் போது,

“இது இளைஞர்களுக்கான மிகவும் முக்கியமான முன்னெடுப்பு. அரசாங்கமும், இதில் ஈடுபட்டுள்ளதால், இந்த துறையின் வளர்ச்சி மிகப்பெரியதாக வரும். வளர்ந்து வரும் துறையாக உள்ளதால், இளைஞர்களுக்கு, இ-ஸ்போர்ட்ஸில் வாய்ப்பு உள்ளது, ஆர்வம் கொண்டவர்களுக்கு, இந்தத் துறையில் சிறப்பான எதிர்காலமும் உள்ளது எனக் குறிப்பிடுகிறார்.

2025-முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் நேரடிப் போட்டியாகவே, இந்த இ-ஸ்போர்ட்ஸைக் கொண்டுவரும் திட்டமும் திராவிட மாடல் அரசுக்கு இருக்கிறது.

திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர் விளையாட்டுத்துறை அமைச்சராக வந்ததில் இருந்து, விளையாட்டுத் துறையில் இந்தியா அளவில், தமிழ் நாடு முத்திரை பதித்து வருகிறது. பராம்பரியமான போட்டிகளில் இருக்கும் விளையாட்டுகளில் மட்டுமின்றி, மாற்றுத்திறனாளிகள் பங்கெடுக்கும் பாரா விளையாட்டுகளிலும் கவனம் செலுத்தி, பல்வேறு திறமையாளர்களைக் கண்டறிந்து ஊக்குவித்து வருகிறது.

நவீனத் தொழில்நுட்பம் உருவாக்கியிருக்கும் புதிய களத்தில் இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது, திராவிட மாடல் அரசு.

**...சாதனை தொடரும்**

## வேண்டுதல் அல்ல, விமர்சனம்!

நீதித்துறையில் நீடிக்கும் சர்ச்சை, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியே தன்னை இந்து நீதிபதியாகக் காட்டிக் கொள்ளும் முனைப்பு ஆகியவை விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில், பத்திரிகையாளர் பரக்கத் அலி 2004-ஆம் ஆண்டு சம்பவத்தை நினைவூட்டி ஒரு பதிவிட்டுள்ளார்.

“அயோத்தித் தீர்ப்புக்காக கடவுள் முன் அமர்ந்து பிரார்த்தனை செய்தேன்” என உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட் சொல்லியிருக்கிறார்.

2004-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்துக்குப் பின்னோக்கிப் பயணிப்போம். குஜராத் அகமதாபாத்தில் உள்ள எம்.எஸ்.பிரகமாபத் மாஜிஸ்திரேட் அன்றைய ஜனாதிபதி அப்துல் கலாம், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி வி.என்.ஹாரே போன்றோருக்குக் கைது வாரண்டு பிறப்பித்தார். இந்தியாவில் மிகப்பெரிய பதவிகளில் இருப்பவர்களுக்கு, ஒரு மாஜிஸ்திரேட், ‘வாரண்டு’ பிறப்பித்த விவகாரம் பேசுபொருளானது.

3 வக்கீல்கள் மூலம் 40 ஆயிரம் ரூபாயை லஞ்சமாக வாங்கிக் கொண்டு, அந்த மாஜிஸ்திரேட் கைது வாரண்டைப் பிறப்பித்தார். தனியார் டி.வி. சேனல் நிருபர்தான், இந்த ஊழலை வெளிக்கொண்டு வந்தார்.

இந்த விவகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு வழக்காக வந்த போது தலைமை நீதிபதி வி.என்.ஹாரே, “ஆண்டவனே… நீதித்துறை இப்படி ஆகிவிட்டதே!” எனச் சொல்லி வேதனைப்பட்டார்.

20 ஆண்டுகள் கழித்து, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட் கடவுளிடம் அயோத்திப் பிரச்னைக்குப் பிரார்த்தனை செய்திருக்கிறார்..! ஆண்டவனே... நீதித்துறை இப்படி ஆகிவிட்டதே!” என்கிறார். இது வேண்டுதல் இல்லை, விமர்சனம் என்பது புரிந்தால் சரி!

## ஃப்ளாஷ்பேக்



கோட்டை அப்பாஸ்



### மழை நேரத்திலும் நலம் விசாரணை!

2013-ஆம் ஆண்டு, கோவை மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் க.ரா.சுப்பையன் அவர்களுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்ட நேரத்தில், அவரை நேரில் பார்த்து விசாரிக்க, அவரது இல்லம் வருகை தந்தார் அன்றைய கழகச் செயல் தலைவர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அப்போது இளைஞர் அணி பொறுப்பிலிருந்த நான், மழை நேரம் என்பதால், தலைவருக்குக் குடை பிடித்து, அழைத்துச் சென்றேன்.

**- கோட்டை அப்பாஸ்,**
**மாவட்டக் கழகத் துணைச் செயலாளர், கோவை மாநகர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### நீதிக்கட்சி அமைச்சரவையின் எதிர்ப்பு!

1921-ஆம் ஆண்டு தொடங்கிய நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில், முதலமைச்சர் சுப்புராயலு இறப்புக்குப் பின்னர், பனகல்அரசர் முதலமைச்சராகப் பதவி ஏற்றார். அப்போது, சென்னையில் நடைபெற்ற மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஆறு தொழிலாளர்கள் உயிரிழந்தனர். அதையடுத்து, தொழிற்சங்கத் தலைவர்களை நாடு கடத்த, கவர்னர் வெலிங்டன் உத்தரவிட்டார். அந்த உத்தரவுக்கு எதிராக, நீதிக்கட்சி அமைச்சரவை பதவி விலக முடிவு செய்ததால், தொழிற்சங்கத் தலைவர்கள் நாடு கடத்தும் உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**643**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131